தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. இடையறாத அன்பை வெளிப்படுத்தல் எனும் பொருளுக்கேற்ற உவமைத்தொடர்,
   i அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல ii ஊருணி நீர் நிறைந்தாற்போல
   iii உடுக்கை இழந்தவன் கைபோல iv கண்ணை இமை காப்பதுபோல

2. ‘மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?’ என்ற பழமொழி உணர்த்தும் பொருள்,
   i முன்யோசனையோடு செய்யும் முயற்சி வீண்போகாது
   ii தைரியம் உண்டானால் மண் குதிரையிலும் ஆற்றைக் கடக்கலாம்
   iii போலிப் பொருட்களைக் கொண்டு காரியம் சாதிக்கத் துணிதல்
   iv முயற்சி ஒன்றில் ஈடுபடுமுன் அதனால் வரும் நன்மை தீமைகளை அறிதல்

3. ‘சாக்கு போக்குச் சொல்லுதல்’ எனும் பொருளைத் தரும் மரபுத் தொடர்
   i இடித்துரைத்தல் ii பசையடித்தல் iii தட்டிக் கழித்தல் iv ஆறப்போடுதல்

4. குழப்ப நிலையை உணர்த்தப் பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான இணைமொழி,
   i குப்பைகூளம் ii அமளிதுமளி iv தில்லுமுல்லு iv ஏச்சுப்பேச்சு

5. குதிரைக்குக் குட்டி போல, சிங்கத்திற்கு,
   i குருளை ii போதகம் iv பிள்ளை iv கன்று

பகுதி 2

01. பின்வரும் செய்யுட்பகுதியை, உரைநடைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை எழுதுக

1. தூல வடிவில் நின்றும் மறைந்த இலட்சிய புருடர்களை இயற்கைப் புலமையும் அறிவுத்தெளிவும் உள்ள உண்மைக்கவிஞர்கள் காவியங்களிலே சூக்கும வடிவில் அமைத்துக்காட்டுகின்றார்கள். இவ்வற்புதக் காட்சியில் இலக்கிய புருடர்களைக் காணாமற் கண்டு பேரானந்தம் அடைகிறோம். இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம். இதே போன்று இலக்கியங்களும் அபின்னம். இலக்கியங்களுடன் அபின்னமாய் நின்று உணர்வார்க்கு இவை புலனாகும். நூறாண்டு கழிந்தாலும் உண்மையிலக்கியங்கள் புதுமை பெற்று உள்ளங்களை தளிர்த்து மலரச்செய்கின்றன.

   i. உண்மைக்கவிஞர்கள் பற்றி யாது கூறப்படுகின்றது?
   ii. தூலவடிவம் சூக்கும வடிவம் என்றால் என்ன?
   iii. அபின்னம் என்ற சொல்லின் பொருளை குறிப்பிடுக
   iv. உண்மை இலக்கியங்கள் பற்றி உரையாசிரியரின் கருத்து என்ன?
   v. இலக்கியங்களின் ஊடாக நாம் அடையும் நன்மை யாது என கூறப்படுகின்றது?